CC No.264/2015 அ.சா.1: குமார் த/பெ.சண்முகசுந்தரம் நாள்: 06.11.2025

**(எதிரி ஆஜர்)**
**(சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

1) எனது புகாரில் எதிரி எந்த வகையான வாகனம் ஓட்டிவந்தார் என்ற விபரத்தினை குறிப்பிடவில்லை என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. விபத்திற்கு பின்பு 2 1/2 மணி நேரம் கழித்துத்தான் நாகுடி காவல் நிலையத்தில் புகாரளித்தேன் என்றால், போலிசார் மருத்துவமனைக்கே வந்து புகார் வாக்குமூலம் பெற்றுச் சென்றனர். விபத்தில் இறந்துபோனவரின் மனைவி இருக்கும்போது ஏன் என்னிடம் போலிசார் புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால், இறந்துபோனவரின் மனைவி அழுதுகொண்டே இருந்ததால் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றனர். விபத்து நடந்ததாக கூறப்படும் சாலையின் அகலம் சுமார் 20-30 அடி இருக்கும் என்றால், சரிதான்.

2) ஒரு திடீர் விபத்தில், மிக அருகருகே ஒன்றன் பின் ஒன்றாக வாகனங்கள் செல்லும்போது விபத்து ஏற்படும் பட்சத்தில் பின்னால் வரும் அடுத்த வாகனத்திற்கும் விபத்தின் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்றால், சரிதான். ஆனால் எனக்கு விபத்தின்போது எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றால், சரிதான். உண்மையிலேயே நான் வாகனத்திற்கு பின்னால் சென்றிருந்தால் எனக்கும் காயம் ஏற்பட்டிருக்கும் என்றால், சரியல்ல. உண்மையில் ஒரு விபத்து ஏற்பட்டால் உடனடியாக மருத்துவமனைக்கு செல்வதுதான் வழக்கம் என்றால், சரிதான். ஆனால் நான் இவ்வழக்கில் இறந்துபோனவரை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்று சொன்னால், சரியல்ல.

3) நான் எனது முதல் விசாரணையில் முதலில் ஆவுடையார்கோவில் காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்தனர் என்றும், பின்னர் ஒரு மணி நேரம் கழித்து நாகுடி காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்ததாகவும் கூறியுள்ளேன் என்றால், நான் சொல்லவில்லை. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால், சரியல்ல. எதிரிக்கு தாடை முழுவதும் அடிபட்டுவிட்டது என்று சொன்னால், எனக்கு தெரியாது. நான் பார்க்கவில்லை. நான் வசிக்கும் கிராம் சம்பவ இடத்திலிருந்து சுமார் 10-15 கி.மீ. தூரம் இருக்கும். எதிரி கோட்டைபட்டினத்திலிருந்து கிழக்கிலிருந்து மேற்காக ஆவுடையார்கோவில் நோக்கி வந்தார் என்றால், சரிதான். எதிரி சாலையில் இடது ஓரத்தில் வந்தார் என்றால், அவர் எந்த ஓரத்தில் வந்தார் என்று எனக்கு தெரியாது. நான் பார்க்கவில்லை.

4) விபத்தில் இறந்துபோன சவுந்தர்ராஜன் வாகனத்தினை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்று எதிரி வாகனத்தின் மீது மோதிவிட்டார் என்றால், சரியல்ல. சவுந்தர்ராஜன் இறந்துவிட்டார் என்ற காரணத்திற்காக எதிரி விபத்திற்கு காரணம் என்று பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

CC No.264/2015 அ.சா.2: இளங்கோவன் த/பெ.செல்லத்துரை நாள்: 06.11.2025

**(எதிரி ஆஜர்)**
**(சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

1) புகாரில் அ.சா.1 எதிரி எந்த வகையான வாகனம் ஓட்டிவந்தார் என்ற விபரத்தினை குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. அந்த புகாரினை நான் காவல் நிலையத்தில் வைத்து எழுதினேன். ஒரு திடீர் விபத்தில், மிக அருகருகே ஒன்றன் பின் ஒன்றாக வாகனங்கள் செல்லும்போது விபத்து ஏற்படும் பட்சத்தில் பின்னால் வரும் அடுத்த வாகனத்திற்கும் விபத்தின் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்றால், இல்லை. ஆனால் நாங்கள் 20 அடி தூரத்தில் பின்னால் வண்டியில் சென்றுகொண்டிருந்தோம். விபத்திற்கு பின்பு 2 1/2 மணி நேரம் கழித்துத்தான் நாகுடி காவல் நிலையத்தில் புகாரளித்தேன் என்றால், சரிதான். போலிசார் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் எவ்வித விசாரணையும் செய்யவில்லை என்றால், சரியல்ல. ஆவுடையார்கோவில் போலிசார் விசாரணை செய்தார்கள். பின்பு நாகுடி காவல் நிலையத்தினர் வந்து விசாரணை செய்தனர்.

2) விபத்தில் இறந்துபோனவரின் மனைவி இருக்கும்போது நான் பொய்யாக புகாரினை எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. எனது அக்கா வீட்டில் இருந்தார் அதனால் அவர் புகார் கொடுக்க வரவில்லை. விபத்தின்போது எதிரியின் தாடை களண்டுவிட்டது என்று சொன்னால், சரியல்ல. இல்லை காயம் மட்டும்தான் இருந்தது. நான் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் நான் இல்லை என்றும், சம்பவத்தினை கேள்விப்பட்டுதான் வந்தேன் என்று சொன்னால், சரியல்ல. சாலையின் அகலம் 20-30 அடி இருக்கும் என்றால், 20 அடிதான் இருக்கும். உரியமுறையில் எனது மச்சான் வாகனத்தினை ஓட்டாமல், கவனக்குறைவாக வாகனத்தினை ஓட்டி எதிரிக்கு காயத்தினை ஏற்படுத்தினார் என்று சொன்னால், சரியல்ல.

3) எனது மைத்துனன் இறந்துவிட்டதால் அவருக்கு ஏதேனும் கிடைக்கவேண்டும் என்பதற்காக பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல. விபத்தின்போது நான் காயம் பட்ட நபர்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல எவ்வித முன் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. ஒரு நபர் இறந்துவிட்டார் என்பதை மருத்துவர்தான் முடிவு செய்யவேண்டும் என்றும், எனது மைத்துனரை காப்பாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சரியல்ல. ஆம்புலன்சில் இருந்த டாக்டர் வந்து இறந்துவிட்டதாக கூறினர். விபத்து நடந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், நான் சம்பவம் நடந்ததாக கூறப்படுவதை கேள்விப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.